PW 3 - திரு.ஜெய்சங்கர், த/பெ.நடராஜன்

**<u>சாட்சி மனுவின் பெயரில் திரும்ப அழைக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்து வைக்கப் பட்டு எதிரி தரப்பு குறுக்கு விசாரணை</u>** :

1) நான் அருள்புரத்தில் குடியிருந்து வருகிறேன் என்றால் சரிதான். சங்கீதா, செல்வராஜ் ஆகியோரை எனக்கு தெரியும் என்றால் சரிதான். அவர்களும் அருள்புரத்தில் உள்ளதால் எனக்கு நன்கு பரிச்சையம் என்றால் சரிதான். நான் வெல்டிங் ஓர்க்ஷாப்பில் வேலைக்கு சென்று வருகிறேன். முதல் விசாரணையில் சொல்லியுள்ளவற்றை தான் போலீசார் விசாரணையில் சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். சம்பவம் நடந்ததாக சொல்லக்கூடிய இடம் குமரன் கார்டன் என்றால் சரிதான். சம்பவம் நடந்த இடம் 1 ஆம் எதிரிக்கு பாத்தியப்பட்ட இடம் என்றால் சரிதான். அது தனியார் இடம் என்றால் சரிதான். சம்பவம் நடந்ததாக சொல்லக்கூடிய இடத்திற்கு யார் என்னை கூட்டிச்சென்றது என்றால் நான், சங்கீதா, அவரது கணவர் செல்வராஜ், உதயகுமார் ஆகிய நான்கு நபர்கள் சென்றோம். வேறு நபர்கள் சென்றேமா என்றால் இல்லை. எத்தனை மணிக்கு சென்றோம் என்றால் ஞாபகம் இல்லை.

2) நாங்கள் சென்று பார்த்தபோது சம்பவ இடத்தில் ஏற்கனவே கால்லுகால் போடப்பட்டு இருந்தது என்றால் சரிதான். சம்பவ இடம் தென்வடல் ரோட்டிற்கு கிழபுறமாக உள்ளது என்றால் சரிதான். சம்பவ இடத்தை சுற்றி நிறைய நபர்கள் குடியிருந்தார்கள் என்றால் அப்போது இல்லை. 4, 5 வீடுகள் தான் இருந்தது. இடம் சம்மந்தமாக 1 ஆம் எதிரி ஏற்கனவே 30.10.2008 ல் ஞானசுந்தரம் மகன் சுரேஷ் என்பவருடன் ஒப்பந்தம் போட்டு பிரச்சனையில் உள்ள விபரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. நான் நேரடியாக சென்று 1 ஆம் எதிரியிடம் பேசவில்லை என்றால் சரிதான். சம்பவ இடம் பிரச்சனைக்குரிய இடம் என்று சங்கீதா என்னிடம் சொல்லவில்லை என்றால் சரிதான்.

3) ஏற்கனவே 1 ஆம் எதிரி, ஞானசுந்தரம், சுரேஷ் மீது மாவட்ட கண்காணிப்பாளர் அலுவலகத்தில் புகார் கொடுத்துள்ள விபரம் தெரியுமா என்றால் தெரியாது. நான் சம்பவ இடத்தில் எவ்வளவு நேரம் இருந்தேன் என்றால் ½ மணி நேரத்திலிருந்து ¾ மணி நேரம் இருந்தேன். பக்கத்தில் உள்ள 4, 5 வீடுகளில் இருந்த நபர்கள் குடியிருந்தார்கள் என்றால் தெரியாது. சம்பவம் நடந்து எத்தனை நாட்கள் கழித்து போலீசார் விசாரித்தார்கள் என்றால் சரியாக ஞாபகம் இல்லை. நான் சம்பவம் நடந்தவுடனே சங்கீதா, செல்வராஜ், உதயகுமார்

ஆகியோர்கள் மருத்துவமனைக்கு சென்று பின்னர் புகார் கொடுத்தோம் என்றால் சரிதான். நான் மருத்துவமனைக்கு சென்றேனா என்றால் உடன் சென்று இருந்தேன். தள்ளிவிட்டதாக சொல்வதில் யார் தள்ளிவிட்டது என்றால் எதிரிகள் இருவரும் சேர்ந்து தள்ளிவிட்டார்கள். தான் குறுக்கட்டவில்லை என்றால் குறுக்காட்டினேன். மேற்படி விபரத்தை போலீசார் விசாரணையில் சொல்லவில்லை என்றால் சொல்லியுள்ளேன்.

4) சங்கீதா, செல்வராஜ் எனக்கு வேண்டப்பட்டவர்கள் என்றாலும், நாங்கள் அங்கு சென்று கம்பிவேலி எடுக்க சொல்லி தகராறு செய்தோம் என்றால் இல்லை. பத்திரத்தை என்னிடம் காண்பித்தார்கள். நாங்கள் நான்று பேரும் சேர்ந்து 1 ஆம் எதிரியை அடித்தால் அவர் மருத்துவமனையில் சிகிச்சை எடுத்துக்கொண்டார் என்றால் இல்லை. அந்த அடித்த சம்பவத்திலிருந்து தப்பிக்க வேண்டி சங்கீதாவிற்கு நாங்களாகவே காயத்தை ஏற்படுத்தி மருத்துவமனையில் சேர்த்துள்ளோம் என்றால் இல்லை. சம்பவம் நடந்தபோது பக்கத்து வீட்டில் உள்ள 4, 5 நபர்கள் பார்த்தார்கள் என்றால் வேடிக்கை பார்த்து இருப்பார்கள். உண்மையில் நான் சொன்னவாறு சம்பவம் எதுவும் நடைபெறவில்லை என்றாலும், அ.சா.1 முதல் அ.சா.3 நபர்கள் எனக்கு வேண்டப்பட்டவர்கள் என்பதால் நான் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. உண்மையில் நான் சொல்லும் சம்பவம் நடைபெறவில்லை என்றாலும், 1 ஆம் எதிரி புகார்தாரரை தள்ளவில்லை என்றாலும், புகார்தாரர் எனக்கு வேண்டப்பட்டவர் என்பதால் நான் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. போலீசார் என்னை விசாரிக்கவில்லை என்றால் சரியல்ல. போலீசார் விசாரணையில் எத்தனை கையொப்பம் போட்டேன் என்றால் தெரியவில்லை. போலீசார் என்னை விசாரிக்கவில்லை என்பதால் தான் எத்தனை கையொப்பம் போட்டேன் என்று தெரியவில்லை என்று பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

மறுவிசாரணை : இல்லை.

சாட்சி விசாரணை என்னால் தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, அவரால் கணினியில் நேரடியாக தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழைகள் திருத்தப்பட்டு சரிபார்க்கப்பட்டது. சாட்சியிடம் கொடுத்து அவர் படித்து பார்த்து சரியென கையெழுத்து செய்தார்.

S SAPNA Digitally signed by S SAPNA Date: 2025.06.23 16:03:55 +0500

நீதித்துறை நடுவர்,

பல்லடம்.

வாக்குமூலம்

குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், பல்லடம்

வழக்கு எண் : CC 42 of 2019

வழக்கு சாட்சி - PW 6

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | திரு.ஹேமலதா | தொழில் | : | |
| கணவர் பெயர் | : | பிரதாப் | வயது | : | |
| கிராமம் | : | | | | |
| தாலுக்கா | : | | | | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on 23.06.2025.

(1, 2 எதிரிகள் ஆஜர்).

**முதல் விசாரணை :** **நாள் : 3.06.2025.**

1) நான் தற்போது பல்லடத்தில் தனியார் கிளினிக் வைத்து நடத்தி வருகிறேன். கடந்த 27.09.2018 ஆம் தேதியன்று பல்லடம் அரசு மருத்துவமனையில் உதவி மருத்துவராக பணியிலிருந்தபோது 27.09.2018 தேதி மதியம் 1.30 மணிக்கு சுமார் 35 வயது மதிக்கத்தக்க சங்கீதா என்ற பெண்மணி அவரது கணவர் மருத்துவமனைக்கு அழைத்து வந்தார். அவரை தனக்கு தெரிந்த இரண்டு நபர்கள் தாக்கியதாக சொன்னார். அவருக்கு நான் சிகிச்சை அளித்தபோது வலது முன்கையில் சிராய்ப்பு காயம் ஏற்பட்டு இருந்தது. அவரை நான் உள்நோயாளியாக அனுமதித்து சிகிச்சை அளித்து 29.09.2018 ஆம் தேதியன்று விடுவித்தேன். அவருக்கு ஏற்பட்ட காயம் சாதாரண காயம் என்று சான்று அளித்தேன். அந்த **விபத்து பதிவேடுடன் கூடிய காயச்சான்றிதழ் அ.சா.ஆ.3** ஆகும். இது சம்மந்தமாக போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**<u>எதிரி தரப்பு குறுக்கு விசாரணை</u>** :

2) போலீசார் எந்த தேதியில் என்னை விசாரித்தார்கள் என்றால் 03.10.2018 ஆம் தேதி ஆகும். ஒருவர் வேகமாக நடந்து சென்று தடுக்கிவிட்டு கீழே விழுந்தால் நான் சொன்ன மாதிரி காயங்கள் ஏற்படும் என்றால் சரிதான்.

மறுவிசாரணை : இல்லை.

சாட்சி விசாரணை என்னால் தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, அவரால் கணினியில் நேரடியாக தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழைகள் திருத்தப்பட்டு சரிபார்க்கப்பட்டது. சாட்சியிடம் கொடுத்து அவர் படித்து பார்த்து சரியென கையெழுத்து செய்தார்.

S SAPNA

Digitally signed by S SAPNA
Date: 2025.06.23 16:04:11 +0500

நீதித்துறை நடுவர்,

பல்லடம்.